DINAKARAN 09 JUL 09

# ஈஷாயோக மையம் சார்பில் இலவச மருத்துவ முகாம்

ஈரோடு,ஜூலை9: ஈஷாயோகா மையம் கிராம புத்துணர்வு இயக்கத்தின் சார்பில் பவானி அருகே ஒரிச்சேரி புதூரில் இலவச மருத்துவமுகாம் நடைபெற்றது.

ஈஷாயோகா மையத்தின் புத்துணர்வு இயக்கம்,ஒரிச் சேரிபுதூர் ஊராட்சி மன்றம் மற்றும் பெருந்துறை ஐஆர்டிடி மருத்துவக்கல்லூரி இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் பவானி அடுத்துள்ள ஒரிச்சேரி புதூர் நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது. முகாமை ஒரிச் சேரிபுதூர் ஊராட்சி மன்ற தலைவர் தங்கமணி துவக்கி வைத்தார். முகாம் துவக்க விழாவில் ஒன்றிய குழு உறுப் பினர் அழகுராஜ்,ஒன்றிய சேர்மன் நல்லசிவம்,தலைமை ஆசிரியை ரெஜினாராணி பால்பண்ணை உரிமையாளர் சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பெருந்துறை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை,டாக்டர் அகர்வால் கண்மருத்துவமனை ஆகியவற்றை சேர்ந்த 30 க்கும் மேற்பட்ட டாக்டர்கள் கலந்து கொண்டு மக ப்பேறு,தோல்,கண்,காது,மூக்கு,தொண்டை,அறுவை சிகிச்சை,இருதயம் உள்ளிட்டவைகளுக்கு பரிசோதனை நடத்தி ஆலோசனைகளை வழங்கினர். முகாமில் கலந்து கொண்ட 100க்கும் மேற்பட்டவர்களுக்கு இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டது.